செய்தி வெளியீடு–499 நாள்–30.6.2008

# 400 கோடி ரூபாய் முதலீட்டில் திருநெல்வேலி மாவட்டம் கங்கைகொண்டானில் டயர் தயாரிக்கும் புதிய தொழிற்சாலை

## முதலமைச்சர் கலைஞர் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்து

**இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்த, பன்னாட்டு நிறுவனமான அலையன்ஸ் டயர்ஸ் நிறுவனம், பல்வேறு வகை டயர்களை மேம்படுத்தித் தயாரித்து வருவதில் 50 ஆண்டுகளுக்கும் மேலாக நிறைந்த அனுபவம் பெற்றுள்ள ஒரு முன்னணி நிறுவனமாகும். இந்நிறுவனத்தின் நிர்வாகத்தை மேற்கொண்டுள்ள யோகேஷ் ஏஜன்சீஸ் மற்றும் முதலீடுகள் நிறுவனமும், நிதியமைப்பு மற்றும் தனியார் பங்குகளைப் பெறுவதில் உலகளவில் தலைசிறந்து விளங்கும் அமெரிக்காவைச் சேர்ந்த வார்பெர்க் பிங்கஸ் நிறுவனமும் இணைந்து 'ஏடிசி டயர்ஸ் பிரைவேட் லிமிடெட்' என்ற ஒரு புதிய தொழில் நிறுவனத்தை உருவாக்கியுள்ளன. இந்தப் புதிய தொழில் நிறுவனமாகிய ஏடிசி டயர்ஸ் நிறுவனம் திருநெல்வேலி மாவட்டம், கங்கைகொண்டான் சிப்காட் தொழிற்பூங்காவில் டயர் தயாரிப்புத் தொழிற்சாலை ஒன்றினை அமைத்திட முடிவு செய்துள்ளது.**

**ஏடிசி டயர்ஸ் நிறுவனம், 3 ஆண்டு காலத்தில் 300 கோடி ரூபாய் அளவுக்கும், அடுத்த இரண்டு ஆண்டுகளில் மேலும் 100 கோடி ரூபாய் அளவுக்கும் ஆக மொத்தம் 400 கோடி ரூபாய் அளவுக்கு முதலீடுகள் செய்யும்; 1000 பேருக்கு நேரடியாகவும், 800 பேருக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகளை வழங்கும். இத்தொழிற்சாலை, திருநெல்வேலி மாவட்டத்தில் அமைக்கப்படுவதால் இது, அரசின் முன்னுரிமை அடிப்படையில் தென் மாவட்டங்களில் இதர தொழில் முதலீட்டாளர்கள் பலருக்கும் தங்கள் தொழிற்சாலைகளை அப்பகுதியில் தொடங்கிட ஊக்கம் அளித்திடும்.**

**இந்தப் புதிய டயர் தொழிற்சாலையை அமைப்பதற்காக, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் இன்று (30.6.2008) நடைபெற்ற புரிந்துணர்வு ஒப்பந்தத்தில், தமிழக அரசின் சார்பில் தொழில்துறைச்செயலாளர், திரு.எம்.எப். ஃபரூக்கி, இ.ஆ.ப., அவர்களும், ஏடிசி டயர்ஸ் நிறுவனம் சார்பில் அந்நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. அசோக் மஹன்சாரியா அவர்களும் கையெழுத்திட்டனர்.**

**இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் திரு. எல். கே. திரிபாதி, இ.ஆ.ப., நிதித்துறைச் செயலாளர் கு.ஞானதேசிகன், இ.ஆ.ப., மற்றும் ஏடிசி டயர்ஸ் நிறுவனத்தின் மூத்த அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.**

***

வெளியீடு– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.